## மார்ச் - 04 - தவக்கால 3ம் ஞாயிறு

### ஆண்டவரின் நியமங்கள் சரியானவை: அவை இதயத்தை மகிழ்விக்கின்றன. திபா. 19:8

### முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 20 : 1 – 17

கடவுள் அருளிய வார்த்தைகள் இவையே: நானே உன் கடவுளாகிய ஆண்டவர் அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக்கொள்ளமாட்டேன் என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் தண்டித்துத் தீர்ப்பேன். மாறாக என்மீது அன்புகூர்ந்து என் விதிமுறைகளைக் கடைப்பிடிப்போருக்கு ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு காட்டுவேன். உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே ஏனெனில், தம் பெயரை வீணாகப் பயன்படுத்துபவரை ஆண்டவர் தண்டியாது விடார். ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு. ஆறு நாள்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலையையும் செய்வாய். ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள். எனவே அன்று நீயும் உன் மகனும் மகளும் உன் அடிமையும் அடிமைப்பெண்ணும் உன் கால்நடைகளும் உன் நகர்களுக்குள் இருக்கும் அன்னியனும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். ஏனெனில், ஆண்டவர் ஆறு நாள்களில் விண்ணுலகையும், மண்ணுலகையும், கடலையும், அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இவ்வாறு ஆண்டவர் ஓய்வு நாளுக்கு ஆசிவழங்கி அதனைப் புனிதப் படுத்தினார். உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும்படி, உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட. கொலை செய்யாதே. விபசாரம் செய்யாதே. களவு செய்யாதே. பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே. பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே பிறர் மனைவி, அடிமை, அடிமைப்பெண், மாடு, கழுதை, அல்லது பிறர்க்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே.

**பதில்பாடல் :** ஆண்டவரே நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன.

### இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 1 : 22 – 25

சகோதர சகோதரிகளே! யூதர்கள் அருமடையாளங்களை வேண்டுமென்று கேட்கிறார்கள் கிரேக்கர் ஞானத்தை நாடுகிறார்கள். ஆனால் நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றிப் பறைசாற்றுகிறோம். அச்சிலுவை யூதருக்குத் தடைக்கல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாயும் இருக்கிறது. ஆனால் அழைக்கப்பட்டவர்கள், யூதரானாலும் கிரேக்கரானாலும், அவர்களுக்குக் கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார். ஏனெனில் மனித ஞானத்தைவிட கடவுளின் மடமை ஞானம் மிக்கது மனித வலிமையைவிட அவருடைய வலுவின்மை வலிமை மிக்கது.

### நற்செய்தி : யோவான் 12 : 13 – 25

அக்காலத்தில் யூதர்களுடைய பாஸ்கா விழா விரைவில் வரவிருந்ததால் இயேசு எருசலேமுக்குச் சென்றார். கோவிலில் ஆடு, மாடு, புறா விற்போரையும் அங்கே உட்கார்திருந்த நாணயம் மாற்றுவோரையும் கண்டார். அப்போது கயிறுகளால் ஒரு சாட்டை பின்னி, அவர்கள் எல்லாரையும் கோவிலிலிருந்து துரத்தினார் ஆடு மாடுகளையும் விரட்டினார் நாணயம் மாற்றுவோரின் சில்லறைக் காசுகளைக் கொட்டிவிட்டு மேசைகளையும் கவிழ்த்துப்போட்டார். அவர் புறா விற்பவர்களிடம், "இவற்றை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள் என் தந்தையின் இல்லத்தைச் சந்தை ஆக்காதீர்கள்" என்று கூறினார். அப்போது அவருடைய சீடர்கள். "உம் இல்லத்தின் மீதுள்ள ஆர்வம் என்னை எரித்துவிடும்" என்று மறைநூலில் எழுதியுள்ளதை நினைவு கூர்ந்தார்கள். யூதர்கள் அவரைப் பார்த்து, "இவற்றையெல்லாம் செய்ய உமக்கு உரிமை உண்டு என்பதற்கு நீர்காட்டும் அடையாளம் என்ன?" என்று கேட்டார்கள். இயேசு மறுமொழியாக அவர்களிடம், "இக்கோவிலை இடித்துவிடுங்கள். நான் மூன்று நாளில் இதைக்கட்டி எழுப்புவேன்" என்றார். அப்போது யூதர்கள், "இந்தக் கோவிலைக் கட்ட நாற்பத்தாறு ஆண்டுகள் ஆயிற்றே! நீர் மூன்றே நாளில் இதைக் கட்டி எழுப்பி விடுவீரோ?" என்று கேட்டார்கள். ஆனால் அவர் தம் உடலாகிய கோவிலைப்பற்றியே பேசினார். அவர் இறந்து உயிருடன் எழுப்பப்பட்டபோது அவருடைய சீடர் அவர் இவ்வாறு சொல்லியிருந்ததை நினைவு கூர்ந்து மறைநூலையும் இயேசுவின் கூற்றையும் நம்பினர். பாஸ்கா விழாவின்போது இயேசு எருசலேமில் இருந்த வேளையில் அவர் செய்த அரும் அடையாளங்களைக் கண்டு பலர் அவரது பெயரில் நம்பிக்கை வைத்தனர். ஆனால் இயேசு அவர்களை நம்பிவிடவில்லை ஏனெனில் அவருக்கு அனைவரைப் பற்றியும் தெரியும். மனிதரைப் பற்றி அவருக்கு யாரும் எடுத்துச் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் மனித உள்ளத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தார்

**தியானம்:** இயேசு தனது உடலை ஆலயம் எனக்குறிப்பிடும் வித்தியாசமான செயலை இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கிறது. இறை பிரசன்னம் இருக்குமிடமெல்லாம் கடவுளின் ஆலயமெனப்படும். எனினும், எங்கும் நிறைந்திருக்கிற இறைவனை சிறப்பான விதத்தில் உணருவதற்கான ஓரிடம்தான் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால், நற்செய்தியில் இயேசு தனது உடலை ஆலயம் எனக்குறிப்பிட்டுப் புதியதொரு அர்த்தத்தைக் கொடுப்பதைப் பார்க்கிறோம். இயேசு தனது உடலை ஆலயம் எனக்குறிப்பிடுவதோடு நின்றுவிடாது, எருசலேம் தேவாலயத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர்களை சாட்டையால் விரட்டியடிக்கிற பகுதியை வாசிக்கிறபோது இயேசுவா இப்படிச் செய்தார்? என்பது மட்டுமல்ல எமது ஆலயங்களைக் குறித்து வேறுவிதமாகச் சிந்திக்கவும் நற்செய்தி எம்மை அழைக்கிறது. இயேசுவின் உடல் மட்டுமல்ல, நம் ஒவ்வொருவரின் உடலும் கடவுளின் ஆலயமே. எங்கும் நிறைந்திருக்கிற இறைவனை சிறப்பான விதத்தில் உணருமிடமே ஆலயம் எனப்படும் வகையில் கடவுளின் சாயலிலும் உருவிலும் படைக்கப்பட்டிருக்கிற நாம் (தொநூ 1:26) அவரது உயிர் மூச்சையே நமது உயிராகக் கொண்டிருக்கும் நமது உடலும் (தொநூ 2:7) கடளின் உயிருள்ள ஆலயமே. இதையே புனித பவுலடியார், "நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? என்கிறார் நமது உடல் கடவுளால் வடிவமைக்கப்பட்டுக் கடவுளால் எமக்குத்தரப்பட்டது. நாம் நமது உடலின் மேன்மையை உணருவோம். கற்களால் கட்டப்பட்ட ஆலயம் எவ்வளவு புனிதமானதோ, அதையும்விட புனிதமானது நம் உடலாகிய கடவுளின் ஆலயம். எனவே எமது உடலை உரிய முறையில் பேணத்தவறுவதும், தவறான செயல்களுக்கு உடலைப் பயன்படுத்துவதும் பாவம் எனப்படுகிறது நம்மில் கடவுள் குடியிருப்பதை உணருவோம். நமது உடலின் மூலமாக பிறரும் கடவுளின் பிரசன்னத்தை உணந்திட வழிவகுப்போம்.